RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd223S12

# Life-Changing Communication in a Contemporary Context

## சமகால சூழலில் வாழ்வியல் மாற்றம் தகவல் தொடர்பு

**D. Anitha [a,*]**

[a] Department of Tamil, King Nandhivarman College of Arts and Science, Thellar, Tamil Nadu, India.

*Corresponding author Email: www.anithu1979@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S12

Received: 13-04-2022; Revised: 18-07-2022; Accepted: 23-07-2022; Published: 19-08-2022

**Abstract:** Based on the method shown by nature the communication methods, that mankind uses today in many different ways, are obtained through science using the sixth sense of man. From the time when caves were used as homes to today when we are exploring ways of living in the sky, communication has been the basic need of mankind. During the Sangam era, there was a practise of announcing news by playing Murushu (drum). Based on this, it is known that the Tamils acquired the ideas of the elements of public communication in the Sangam period itself. In the classical period, there was a sharing of internal and external life messages. This article aims to examine how communication has played a role in the changes in life in the contemporary environment from then to today.

**Keywords:** Communication, Environment, Mankind, Murushu,

**Language: Tamil**

## முன்னுரை

இயற்கை காட்டிய வழிமுறையின் அடிப்படையில் மனிதனின் ஆறாம் அறிவை பயன்படுத்தி அறிவியல் மூலம் பெற்றுள்ளதே இன்று மனிதகுலம் பல வகைகளில் பல்வேறு வழிகளில் பயன்படுத்துகின்ற தகவல் தொடர்பு வழிமுறைகளாகும். குகைகளை வீடாக பயன்படுத்திய காலம் முதல் இன்று விண்ணிலேயே வீடமைத்து வாழும் வழிகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் இன்றைய காலம் வரையிலும் மனித குலத்தின் அடிப்படைத் தேவையாகத் திகழப் போவது தகவல் தொடர்பு என்பதுவே. சங்ககாலத்தில் முரசு அறைந்து செய்தி அறிவிக்கும் நடைமுறை இருந்துள்ளது. இவ்வடிப்படையில் சங்ககாலத்திலேயே தமிழர்கள் மக்கள் தகவல் தொடர்பியல் கூறுகளைச் சிந்தனைகளைப் பெற்றிருந்தனர் என்பது தெரிய வருகிறது. செம்மொழிக் காலத்தில் அகச் செய்திகளையும் புறச் செய்திகளையும் பகிர்ந்து கொள்ளும் நிலை இருந்துள்ளது. அன்று முதல் இன்று வரை சமகாலச் சூழலில் வாழ்வியல் மாற்றங்களில் தகவல் தொடர்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை ஆய்வு செய்யுமாறு இக்கட்டுரை அமைகிறது.

## தூது இலக்கியம்

தலைவன் தலைவியரிடையே பிரிவு ஏற்படும் போது இருவர் தனது பிரிவுத்துயரை மற்றவருக்கு அறிவிக்கும்படி அஃறினைப் பொருட்களைத் தூது செல்ல ஏவுவது போல தூது இலக்கியம் உள்ளது. சொல்ல விரும்பும் ஒரு பொருளை கவிநயத்துடன் சொல்வதற்காக ஒரு கற்பனை வடிவமே இது. அன்னம், கிளி, மான், வண்டு போன்ற உயிரினங்கள் மட்டுமன்றி காற்று முகில் தமிழ் என்பனவும் தூது இலக்கியங்களில் தூது சொல்ல ஏவப்படுகின்றன.

## அக இலக்கியத்தில் தகவல் பரிமாற்றம்

அகநிலையில் காதல் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் நிலைப்பாடு சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. தலைவன் வருகையை அறிவித்தல், தலைவன் பிரிதலை அறிவித்தல் போன்ற செயல்பாடுகள் தோழி வழிதொடர்பு படுத்தப்ட்டு தலைவியை அடைந்துள்ளன.

அறத்தொடு நிற்றல் என்ற துறையானது மகளின் காதல் அவளின் குடும்பத்தாருக்குச் சென்று சேரும் வண்ணம் தோழி, செவிலி, நற்றாய், தந்தை தனையர் என்று கடத்தப்படுகிறது. தலைவி ஒருத்தி தலைவனைக் காதலிக்கிறாள் என்றால் அவளின் காதலைச் சமுதாயம் அறிந்து கொண்டால் அதற்குப் பெயர் அலர், அம்பல் என்பதாகும். தலைவி தலைவனின் காதலை ஏற்காமல் மறுக்கிறாள் என்றால் தலைவியின் உருவத்தை எழுதி பனையோலைக் குதிரையில் அளர்ந்து தலைவன் மடலேறுகிறான். இது நிறைவேறாத காதலை நிறைவேற்றிக் கொள்ள செய்யும் தகவல் நடைமுறையாகும்.

“கூன்முன முண்டகக் கூர்ம்பனி மாமலர்

நூல்அது முத்தின் காவொடு பாறித்

துறைதொடும் பரக்கும் தூயணற் சேர்ப்பனை

யானும் காதலன் யாயும் நனி வெய்யள்

எந்தையும் கொடீயர் வேண்டும்

அம்பல் ஊரும் அவளோடு மொழிமே”

என்ற பாடலில் தலைவி காதலை தாய் தந்தை ஆகியோர் அறிந்து கொள்கின்ற நடைமுறை விளக்கப் பெற்றுள்ளது (Duraisami Pillai, 1966). அது மட்டும் இல்லாமல் ஊரார்க்குத் தலைவியின் காதல் தெரிய வந்துள்ளது என்பதை ஊரும் அவளோடு மொழிமே என்ற அடி காட்டுகிறது. இவ்வகையில் நயமான காதல் நிலையில் தகவல்கள் கடத்தப் பெற்றுள்ளன.

## திருக்குறளில் தூது

திருவள்ளுவர் திருக்குறளில் தூது என்ற தலைப்பில் ஓர் அதிகாரத்தை அமைத்துள்ளார். அந்த அதிகாரத்தில் தூதுவரின் இலக்கணம் பண்புகள் தூது சொல்லும் முறை என்பவற்றைப் பத்து குறள்களில் விளக்குகின்றார் சான்றாக

“தொகச் செல்லத் தூவாத் நீக்கி நகச் செல்லி

நன்றி பயப்பதாம் தூது”

தூது செல்பவர்கள் தாம் செல்ல வேண்டியவற்றைக் காரணவகையால் தொகுத்துக் கூறவேண்டும் (Parimelalhagar, 2002). இனிய சொற்களால் கேட்பவர் மனம் மகிழும்படி சொல்ல வேண்டும். இவ்வாறு கூறித்தூது அனுப்புவோருக்கு நன்மை ஏற்படுத்துபவனே தூதன் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

## தொல்காப்பிய தூது

தொல்காப்பியர் தாம் இயற்றிய தொல்காப்பியத்தில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே பிரிவு ஏற்படுவதற்கு உரிய காரணங்களில் ஒன்றாகத் தூது செல்வதைக் குறிப்பிடுகின்றார்.

“ஓதம் பகை தூது இவை பிரிவே”

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே தூது செல்வதனை தொல்காப்பியம் குறிப்படுகின்றது (Ilampuranar, 2005). இது போன்ற தூது பற்றிய செய்திகள் தொல்காப்பியத்தில் இடம்பெறக் காணலாம்.

## தகவல் தொலைத் தொடர்பு

உணவு, உடை, இருப்பிடம் இவற்றுடன் தொழில் நுட்பமும் தற்போது அடிப்படைத் தேவையாகி விட்டது. பிறப்பில் இருந்து இறப்பு வரை அறிவியலும் தொழில்நுட்பமும் நம் நிழல் போல கூடவே வருகிறது. தொழில்நுட்பம் பன்மடங்கு வேகத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. இது இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த வளர்ச்சி நம் அன்றாட வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்கள் பற்றி கூறுகிறோம். ஒரு செய்தி கடல் கடந்து வேறு ஒருவரிடம் சென்றடைய நாட்கள் மாதங்கள் ஆண்டுகள் என இருந்த காலமெல்லாம் ஓடிபோய் தற்போது நொடிப்பொழுதில் பல்லாயிரக்கணக்கான செய்திகள் கடல் கடந்து நாடு கடந்து வந்தடைகின்றன. இவற்றையெல்லாம் விட வியப்பூட்டும் விஷயம் வேற்று கிரகத்துக்கே நாம் செய்திகளை அனுப்புக் கொண்டிருக்கிறோம் என்பது தான்.

## தகவல் தொடர்பில் கல்வி

ஒரு காலத்தில் கல்வி அறிவை தேடி தேடிப் பெற்றனர். ஆனால் தற்போது அது நம்மைத் தேடி வருகிறது. வகுப்பறைகள் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. கரும் பலகைகள் போய் மின்திரைகள் வந்து விட்டன. கையளவு செல்லிடப்பேசியில் அனைத்து பக்கங்களும் அடங்கி விட்டன. மாணவர்கள் அறிவியலோடு மட்டுமின்றி அறிவோடும் வளர்கின்றனர்.

## சாதனங்கள் இல்லாத தகவல் தொடர்பு

மக்கள் குழுக்களாக சமூகமாக வாழத்துவங்கும் பொழுது ஒருவருக்கு ஒருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள ஒரு பந்தினை ஏற்படுத்த தகவல்தொடர்பு அவசியமானது. இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தால் இயற்கை முறையால் ஒலிகளை கொண்டு அதற்கான கருவிகளை தயார் செய்தனர். கோட்டும் முரசு பறை போன்ற கருவிகள் மூலம் தொலைவில் உள்ளவர்களுக்கு அல்லது கூட்டத்திற்கான தகவல்களை பகிர்ந்து கொண்டனர்.

குதிரையில் தகவல்களை கட்டி விடுவது தூதுவர்களை அனுப்புவது போன்றவை சூழ்நிலைக்கேற்ப மாறி தூது புறாக்களை பயன்படுத்த துவங்கினர். அதன்பின் அதிகாரமிக்க ஆட்சியாளர்கள் தங்கள் தபால் சேவைக்காக திட்டங்களை கட்டமைத்தனர் பின்பு செல்லிடப்பேசி சேவை தொடங்கப்பட்டது. இணையம் செல்லிடப்பேசியுடன் இணைந்த பொழுது ஏற்பட்ட புரட்சி இன்று விண்ணை தொடும் அளவிற்கு உலகெங்கும் வளர்ந்து வருகிறது.

## முடிவுரை

குகை சுவற்றில் படமாக வரைந்து தகவல் தெரிவித்த மனிதன் இன்று செல்லும் இடம் எல்லாம் எளிதாகத் தொடர்பு கொள்ளும் செல்லிடப்பேசி கருவியை பயன்படுத்துகின்றனர். மாற்றம் ஒன்றே மாற்றம் இல்லாதது என்பார்கள். ஆனால் இன்று அறிவியல் வளர்ச்சியால் அந்த மாற்றமும் மாறுபட்டு அமைகிறது இயற்கை காட்டிய எதிரொலி இன்று வரையில் வளர்ச்சியடைந்து விட்டது. தகவல் தொடர்பு என்பது மனித நாகரீகத்தின் அடிப்படையாக மாறிவிட்டது.

## References

Avvai S. Duraisami Pillai, (1966) Kurunthogai moolamum uraiyum, Aruna Publications, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

**Funding**

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

D. Anitha, Life-Changing Communication in a Contemporary Context, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 7-10. DOI: https://doi.org/10.54392/ijmrd 223S12